30th March 1964]

திரு. ஜே. மாதா கவுடர் : நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே ஜனநாயக ஆட்சி நிலவுகிற காரணத்தினால் அந்நிய நாட்டானுக்காகப் பரிந்து கொண்டு பாகிஸ்தான் சிந்தாபாத் என்று சொன்னாலும் நாம் பொறுமையாக இருக்கிறோம். இதேபோன்று பாகிஸ்தானில் யாராவது ஒருவர் 'பாரதம் சிந்தாபாத்' என்று சொன்னால் அவரை உடனே சுட்டுக் கொன்றிருப்பார்கள். ஒருவரையாவது வைத்திருப்பார்களா என்று கேட்கிறேன். நாம் ரொம்பவும் பொறுமை காட்டி வருகிறோம். அதனால்தான் உண்மைக்குப் புறம்பாக மக்களிடத்திலே சொல்லி இந்த நாட்டிற்குத் துரோகம் செய்யக்கூடிய வகையில் ஒரு கட்சி இயங்குகிறது என்றால் அதன் மீது கண்டிப்பாகச் சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம அங்கத்தினர் பேசியபோது இங்கேயுள்ள முஸ்லிம் லீக்கைச் சார்ந்தவர்கள் பாகிஸ்தான் சிந்தாபாத் என்று சொன்னதாகச் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் இங்கேயும் பாகிஸ்தான்—இந்தியா என்ற கலவரத்தை உண்டுபண்ணுவதற்கு விரும்புகிறார்களா ?

VIII.—EXPUNCTION OF OBJECTIONABLE MATTER

MR. DEPUTY SPEAKER : I wish to make an announcement to the House. The hon. Member Sri V. Krishnamoorthy, in the concluding portion of his speech to-day has used some undignified words against the Ministers. I consider them undignified and order the expunction of that portion from the official report of the proceedings of the House.

VII.—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS APPROPRIATION (NO. 2) BILL, 1964 (L.A. BILL NO. 19 OF 1964)—*cont.*

* **திரு. சி. வெ. வேலப்பன் :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறும் விவாதத்திலே நானும் கலந்து கொண்டு எனது கருத்துக்களை எடுத்துச் சொல்ல முற்படுகிறேன். நாங்கள் பேசும்போது பல குறைபாடுகளை எடுத்து சொல்லுகிறோம். அந்தக் கருத்துக்களைக் குறிப்பு எடுப்பதோடு நின்று விடாமல் அவைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கனம் அங்கத்தினர் திரு. மாதா கவுடர் அவர்கள் குறிப்பிட்டது போல குறிப்பிடப்பட்ட குறைகளின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்ன, அவற்றின் விளைவு என்ன என்ன என்பது பற்றியெல்லாம் எழுத்து மூலமாகச் சட்டமன்றத்திலே இருக்கிற அங்கத்தினர்களுக்கு அளிக்க வேண்டும். பேசுகின்ற அங்கத்தினர்கள் நல்ல பொறுப்பு வாய்ந்தவர்கள். இங்கே திருவள்ளுவர் படத்தின் அடியில் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகத்தைப் பார்க்கும்போது என் போன்றவர்கள் தெரிந்தோ தெரியாமலோ சரியான கருத்துக்களை எடுத்துச் சொல்லாமல்